1971 டிசம்பர் 15]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட நோயில்கள் பல தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவற்றைப் பார்ப் பதற்கு பல இடங்களிலிருந்தும் பில்கிரிம்கள் வருகிறார்கள். அப் படிப்பட்ட இடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு, டிரை னேஜ் போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்கு—ஃப்ரம் தி ஹெல்த் பாயிண்ட் ஆப் வியூ—அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில் திருப்பணிப் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டு வருகிறது. இது சுகாதார இலாகா சம்பந்தப்பட்டது. தனிக் கேள்வி போட வேண்டும்.

யுனெஸ்கோ நிறுவனத்தால் கோவில்களுக்கு நிதியுதவி

* 442 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

யுனெஸ்கோ நிறுவனத்தின் சார்பில் 1970-71-ல் தமிழகத்தில் எத்தனை கோவில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நிதி உதவி அளிக்கப் படுவதில்லை. ஆனால் இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள் களின் வடிவில் அவ்வுதவி அளிக்கப்படுகிறது. மேற்படி நிறுவனம் திருவரங்கத்திலுள்ள அரங்கநாதஸ்வாமி கோயிலுக்கு மட்டும் ரூ. 21,818 மதிப்புள்ள "பென்கேப்சுலா" ஐ (ஒருவகைத் தெளிக்கும் எண்ணை) 1970-71-ல் வழங்கியுள்ளது.

மதுரை நகருக்குத் தங்கும் விடுதி.

* 443 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அறநிலையத்துறையின் சார்பில் மதுரை நகரில் தங்கும் விடுதி கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]